இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார். அவர்களுக்கு வேண்டியமட்டும் கிடைத்தது. அவர்கள் வயிறார உண்டபின், "ஒன்றும் வீணாகாதபடி எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வையுங்கள்" என்று தம் சீடரிடம் கூறினார். மக்கள் உண்டபின் ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து எஞ்சிய துண்டுகளைச் சேர்த்துச் சீடர்கள் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள். (யோவான் 6:11-13)



# உலகின் எதிர்காலம், இளையோருக்கும், முதியோருக்கும் இடையேயுள்ள நல்லுறவைச் சார்ந்தது

**வத்திக்கான்:** குடும்பத்தில் வயதானவர்களின் பங்கிற்கு தனது ஆதரவைக் காட்ட விரும்பிய திருத்தந்தை பிரான்சிஸ் சமீபத்தில் உலக தாத்தா, பாட்டி மற்றும் முதியோர் தினத்தை உருவாக்குவதாக அறிவித்தார். அதன்படி, ஜூலை மாதத்தில் புனித அன்னம்மாள் ஜோக்கிம் விழாவுக்கு மிக அருகிலான 4-ஆம் ஞாயிற்றுக் கிழமையைத் தேர்வுச் செய்தார். இந்த தாத்தா-பாட்டிமார்களின் முதல் தினம் இன்று 25, ஜூலை தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை, "அன்பு தாத்தாக்களே, பாட்டிகளே, அகில உலகத் திருஅவை உங்களுக்கும் என்க்கும் நெருக்கமாக இருக்கின்றது, உங்கள் மீது அக்கறை காட்டுகிறது, அன்பு கூர்கிறது, மற்றும், உங்களைத் தனித்துவிட விரும்பவில்லை" என்றார். உரோமை ஆயராகிய திருத் தந்தை, 'எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' (மத். 2:20) என்ற தலைப்பில், இன்று ஜூலை 25-ம் தேதி, திருஅவையில் முதன்முறையாகச் சிறப்பிக்கப்படும், தாத்தாக்கள், பாட்டிகள் மற்றும், வயதுமுதிர்ந்தோர் உலக நாளுக்கென, தான் எழுதியுள்ள செய்தியில், இவ்வாறு உறுதி கூறியுள்ளார்.

## வானதூதர்கள் சந்திப்பு

மிகக் கடுமையாக நம்மைத் தாக்கியுள்ள கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் இச்செய்தி வெளியிடப் படுகின்றது என்றுரைத்துள்ள திருத்தந்தை, இருள் படர்ந்த நேரங்களிலும்கூட, ஆண்டவர் வானதூதர்களைத் தொடர்ந்து அனுப்பி, நம் தனிமையில் ஆறுதலளிக்கிறார், மற்றும் "எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்பதை நினைவுபடுத்துகிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

## பணிக்கு ஓய்வு வயதில்லை

பணியிலிருந்து ஓய்வுபெறும் வயதைத் தொட்ட காலக்கட்டத்தில் உரோம் ஆயராகப் பணியை ஏற்றேன். எதுவும் புதிதாக ஆற்றமுடியாது என்று நினைத்தேன், ஆனால் ஆண்டவர் எப்போதும் நமக்கு நெருக்கமாக இருந்து, புதிய வாய்ப்புக்களை, புதிய கருத்தாக்கங்களை, மற்றும் புதிய ஆறுதல்களை வழங்கிக் கொண்டிருக்கிறார், ஆண்டவர் ஒரு போதும் பணிஓய்வில் இருப்பதில்லை என்று திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

வயதான காலத்தில் நம் அழைத்தல் என்ன என்று சிந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ள திருத்தந்தை, நம் அழைப்பு, நம் அடிப்படை குடும்ப மரபைப் பாதுகாக்க வேண்டியது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும், எந்த வயதில் இருந்தாலும், தனியாகவோ குடும்பமாகவோ இருந்தாலும், நற்செய்தியை அறிவிக்கவும், அதை அடுத்த தலைமுறைகளுக்கு வழங்கவும், ஓய்வு வயதே கிடையாது என்பதை நினைவுபடுத்தினார்.

## கனவுகள்

"உங்கள் முதியோர் கனவுகளையும், உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் காண்பார்கள்" (யோவேல் 2:28) என்று இறைவாக்கினர் யோவேல் கூறிய சொற் களை நினைவுபடுத்தியுள்ள திருத்தந்தை, உலகின் வருங்காலம், இளையோருக்கும், முதியோருக்கும் இடை யேயுள்ள நல்லுறவைச் சார்ந்துள்ளது என்றும், இளையோரின்றி வேறு எவரால், முதியோர் களின் கனவுகளை நிஜமாக்க முடியும்? என்றும் கேள்வி எழுப்பினார்.

"எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று நம் ஆண்டவர் கூறிய திருச்சொற்களை நாம் அனைவரும்



குறிப்பாக இளையோர் அடிக்கடி சொல்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும், இச்சொற்கள் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லவைக்கின்றன என்றுரைத்து, தன் ஆசீரோடு இச்செய்தியை நிறைவுசெய்துள்ளார் ,திருத் தந்தை பிரான்சிஸ்.

# நெருக்கடி நிவாரண சேவைகள் & பயிற்சிகள் மையத்திற்குத் ஆதரவு

**கோலாலம்பூர்:** நெருக்கடி நிவாரண சேவைகள் மற்றும் அதன் பயிற்சி மையத்திற்கு அரசு சாரா இயக்கம் (Crisis Relief Services & Training (CREST) கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களை தங்களோடு இணைந்து கோவிட்-19 தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இணையுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.



*பேராயர் ஜூலியன் லியாவ்*

இந்த அழைப்பையொட்டி மேலும் விவரித்த பேராயர், மலேசியாவில், குறிப்பாக கிள்ளான் பள்ளத்தாக்கில், தற்போதையக் காலக்கட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட கோவிட்-19 தொற்றுடையோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், வகை 1 மற்றும் வகை 2 கோவிட் தொற்று நோயாளிகளுக்கு முறைபடுத்தப்பட்ட கவனிப்பை வழங்க எனக்கு அழைப்பு வந்துள்ளது என்றார்.

1998-ம் ஆண்டு முதல் மலேசியாவில் பதிவுசெய்யப்பட்ட, CREST என்பது நம்பிக்கை அடிப்படையிலான அரசு சாரா மற்றும் இலாப நோக்கற்ற அமைப்பாகும், இது பேரழிவு ஏற்படும் வேளைகளில் மக்கள் நலனில் கவனம் செலுத்தி வருகிறது. கடந்த 21 ஆண்டுகளாக இந்த மையம் வெவ்வேறு 20 நாடுகளில் செயல்பட்டு வருகிறது. நம் நாட்டின் தற்போதைய தொற்று நெருக்கடி காலங்களில், ஒரு தனிமைப் படுத்தும் மையத்தை அமைப்பதில் இந்த அமைப்பு முயன்று வருகிறது. குறிப்பாக, B40 எனும் அடிதட்டு குடும்பங்கள் அல்லது தொற்றுக்குள்ளான ஏழைகள் ஆகியோருக்கு மேற்கண்ட மையத்தை ஏற்படுவதும் முயற்சியில் இறங்கியுள்ளது.

# 'கத்தோலிக்க வாழ்வில் அருள் அடையாளங்கள்' சொற்பொழிவு நடைபெற்றது

'கனிதரும் சீடத்துவம்' எனும் பொதுநிலை யினர் பேரவை அதன் மாதாந்திர உருவாக்கப் பயிற்சிகளையொட்டி 'கத்தோ லிக்க வாழ்வில் அருளடையாளங்கள்' எனும் தலைப்பில் ஜூலை மாதம் இரு பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தது. சிரம்பான், மினவுதல் அன்னை பங்கின் பங்குத்தந்தை சேவியர் என்ரூ அவர்கள் அழைப்பை ஏற்று, இப்பயிற்சியை வழங்கினார்.

இம்மாதம் 4 மற்றும் 18 ஆம் திகதிகளில் இயங்கலை (zoom) வழியாக நடைபெற்ற இப்பயிற்சியில் 65 பேர் கலந்து கொண்டனர். அருளடையாளம் எனும் வார்த்தைக்கு இறையியல் பூர்வமாக விளக்கமளித்து சிறப்பாகவும் எளிமையாகவும் சொற் பொழிவை வழங்கினார். இரவு 8.00 மணிக்குத் துவங்கிய இப்பயிற்சியில், மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் கிறிஸ்து நம்மோடு உறவு கொண்டு நம்மை அருள் வாழ்வில் வளரச் செய்கிறார்: தம்



*அருள்தந்தை சேவியர் என்ரூ*

பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறை நிகழ்ச்சியில் நாம் பங்கேற்கச் செய்கிறார். இவ்வாறு மனித வாழ்வின் முக்கிய கட்டங்களில் கிறிஸ்து ஆற்றும் செயல் களேஅருளடையாளங்கள் என்பதைத் தெளிவுப்படுத்தினார்.

மேலும், அருளடையாளங்களின் இயல்பு, கிறிஸ்தவ வாழ்வில் அவை வகிக்கும் பண்பு ஆகியவற்றை தெளிவுப்படுத்திய அருள் தந்தை அவ்வப்போது, கத்தோலிக்க மக்களிடையே அருளடையாங்கள் மட்டில் கொண்டுள்ள அக்கறையின்மையையும் சுட்டிக்காட்டினார். கிறிஸ்தவ வாழ்வை உருவாக்கி நிறைவை நோக்கி இட்டுச் செல்பவை இவ்வருளடையாளங்கள். மீட்பை வழங்கும் வாய்க்கால்களாகவும் அருள டையாளங்கள் செயல்படுகின்றன என்று விளக்கினார்.

தொடர்ந்து அருளடையாளங்களில் மூன்று பிரிவுகளான புகுமுக, குணமளிப்பு மற்றும் சேவைக்கான அருளடையாளங்கள் எனப் பிரித்து ஒவ்வொரு அருளடையாளத்தையும் அதன் தன்மையையும் பணியையும் விவரித் தார்.

இறை - மனித உறவில் இறைவனின் அன்பை வெளிப்படுத்த மனித வாழ்வின் பல்வேறு காலக்கட்டங்களில் வாழ்வுச் சூழல்களுக்கு ஏற்ற வகையில் இறையருளை வழங்கும் அடையாளங்கள் நமக்கு அருள் அடையாளங் களாகத் திகழ்கின்றன என்ற சிந்தனையோடு பயிற்சியை முடித்தார்.

நிறைவாக, சொற்பொழிவில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அருள் தந்தைக்கும் அவரோடு இணைந்து பயிற் சியை ஒருங்கிணைத்த சகோ. லியோ மரியதாஸ் அவர்களுக்கும், கலந்து கொண் டோருக்கும் பேரவையின் தலைவர் ம. செல்வராஜூ அவர்கள் நன்றி கூறினார்.

- ஆர்.கே.

# கோவிட்-19 தொற்றை புரிந்துகொள்வதும் சமாளிப்பதும்-கலந்துரையாடல்

பினாங்கு: தற்காலத்தில் நாம் அனுபவிக்கும் இந்த புதிய வாழ்க்கை முறை பல கேள்விகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் இந்த கொரோனா தொற்று என்பது என்ன? உலகளவில் இது எப்படி மில்லியன் கணக்கான மக்களைப் பாதித்தது? இத்தொற்று தொடர்ந்து படர்வதை எப்படி சமாளிப்பது? தனிமைப் படுத்திக் கொள்வதால் ஏறப்பக்கூடிய உடல் மற்றும் உள ரீதியான விளைவுகளை எப்படி மேற்கொள்வது? இந்த பிரச்சைனைகளுக்கிடையில் கடவுள் எங்கே இருக்கிறார்?




இங்குள்ள தூய ஆவியார் பேராலயத்தில், நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் பேசிய நிபுணர்கள் மேற்கண்ட கேள்விகளுக்கு கடந்த ஜூலை 4 -ம் திகதி இயங்கலை வழியாக, நல்ல பதில்களை அளித்தனர். இந்த பகிர்வு நிகழ்வானது உடல் நலம், உள நலம் மற்றும் ஆன்மீகம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

முதல் சொற்பொழிவாளர் Dr Cheang Han Kit, இந்த கொரோனா தொற்றின் பூர்வீகத்தையும் அதனை தடுப்பூசியின் வழி எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றி எடுத்துரைத்தார். பயன்பாட்டில் உள்ள வெவேறு தடுப்பூசிகளின் தன்மைகள் பற்றியும் விவரித்தார்.

அடுத்து பேசிய Sarah Ann Chou எனும் உளவியல் மருத்துவப் பணியாளர், இந்த தொற்றின் காரணமாக எழுந்துள்ள உளவியல் ரீதியான பிரச்சனைகள் தொட்டுப் பேசினார். அவற்றுள் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அச்சம், நிச்சயமற்ற நிலை ஆகியவற்றால் மக்கள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதை விளக்கினார். மேலும் Dr Russ Harris அவர்களின் கண்டுபிடிப்பான FACE COVID எனும் வழிமுறைப்படி உளவியல் பிரச்சனைக்குத் தீர்வுகான முயலாம் என்று கருத்துரைத்தார்.

அடுத்து, பங்குத்தந்தையான அருள்தந்தை ஜோக்கிம் ரோபர்ட் அவர்கள் 'அச்சத்தை சரண்டையுங்கள்' என்ற தலைப்பில் பேசினார். தொடர்ந்து, நீதிமொழி 3:5-6 உள்ள இறைவார்த்தைப் பகுதியை விளக்கி, இந்த தொற்றின் நிமித்தம் எழுந்துள்ள அச்சத்தால் துண்டுவிடாமல், அதனை இறைவனின் பாதத்தில் வைத்து வாழ்க்கையைத் தொடர வேண்டும் என்று அறிவுறுத்தினர்.




# இந்திய இயேசு சபையினர் முன்னெடுக்கும் 'தேசிய நீதி நாள்'

இந்தியாவில் மனித உரிமைகளையும், நீதியையும் நிலைநாட்ட உழைத்துவரும் பல்வேறு அமைப்புக்களுடனும், நல்மனம் கொண்டோருடனும் இணைந்து, இந்திய இயேசு சபை துறவியர், 'தேசிய நீதி நாள்' என்ற பெயரில், ஜூலை 28, வருகிற புதனன்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாக, இந்திய இயேசு சபை தலைவர், அருள்பணி ஸ்தனிஸ்லாஸ் டி'சூசா அவர்கள், மடல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஜூலை 28 மாலை, இந்திய நேரம், 6 மணி முதல், 6.45 முடிய, இந்தியாவின் பல்வேறு ஆலயங்கள், துறவியர் இல்லங்கள், நிறுவனங்கள் அனைத்தின் முன்னிலையில், கோவிட் பெருந்தொற்று விதித்துள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, மக்கள், நீதிகோரும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கி நிற்கவிருப்பதாக இம்மடலில் கூறப்பட்டுள்ளது.



## மருத்துவ சிகிச்சையில் புறக்கணிப்பு என்பதற்கே இடமில்லை

உலகெங்கும் மக்கள் பலர், வாழ்வைப் பாதுகாக்கும் மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதற்கு இடர்களைச் சந்தித்து வரும் வேளை, உலகெங்கும் பெருந் தொற்று தடுப்பூசிகள் சமமாக விநியோகிக் கப்பட வேண்டும் என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மருத்துவச் சிகிச்சையில் புறக்கணிப்பு என்பதற்கே இடமில்லை என்பதையும் வலியுறுத்திய இவர், நாம் எந்த மதத்தைச் சார்ந்தவராய் இருந்தாலும், இந்த விடயத்தில் அனைவரும் ஒருமித்து குரல் எழுப்பவேண்டும் என்று வலியுறுத்தினார்.

## தோக்கியோ ஒலிம்பிக்கில் கொரோனா ஆபத்து தவிர்க்க முடியாதது: உலக சுகாதார அமைப்பு

தோக்கியோ ஒலிம்பிக் போட்டியில், கொரோனா வைரஸ் பாதிப்பை தவிர்க்க முடியாது என, உலக சுகாதார அமைப்பின் டெட்ராஸ் அதனோம் எச்சரித்துள்ளார்.

அவர் கொரோனா பாதிப்பு புள்ளி விபரத்தின் மூலம், ஒலிம்பிக் போட்டியில் வைரஸ் பாதிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. வைரஸ் பிரச்னையை முற்றிலும் ஒழிப்பதென்பது முடியாத காரியம். விளையாட்டு வீரர்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரை விரைவாக அடையாளம் கண்டு, தனிமைப்படுத்த வேண்டும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# கருணை பொங்கும் உள்ளம் அது கடவுள் வாழும் இல்லம்

இன்று ஆண்டின் பொதுக்காலம் 17-ம் வாரத்தில் நுழைகிறோம். நாம் இன்று படிக்கக்கேட்கும் வாசகங்கள் இறைவனின் பரிவுள்ளத்தையும் அவரது பரிவிரக்கதையும் வெளிக்காட்டுகின்றன. முதல் வாசகத்தில் ஆண்ட வரின் அடியவராகிய எலிசாவிடம் பணியாளர் ஒருவர் வாற்கோதுமை அப்பங்களையும் முற்றிய தானியங்களையும் கொண்டு வந்தபோது, எலிசா அவரிடம், "மக்களுக்கு உணவு கொடு" என்கிறார், அம்மனிதர் அவர்களுக்கு உணவினைப் பரிமாற, எல்லாரும் உண்ட பின்னும் மீதம் இருக்கின்றது.

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு பெருந்திரளான மக்கள் நீண்ட நேரம் இருந்து, அவருடைய போதனையைக் கேட்டுக்கொண்டிருந்த படியால், அவர்கள் பசியாய் இருப்பதை அவர் உணர்கின்றார். உடனே இயேசு பிலிப்பிடம், "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?" என்று கேட்கின்றார். பிலிப்போ, "இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே" என்கின்றார். இங்கே இயேசுவின் வார்த்தைகளுக்கும் பிலிப்பின் வார்த்தைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இயேசுவோ மக்களின் தேவையை உணர்ந்து, அவர்களுடைய பசியை எப்படிப் போக்குவது என்று சிந்திக்கும்போது, பிலிப்போ அதில் உள்ள சிக்கலை மட்டுமே பார்க்கின்றார். அதனால் தான் அவர் அப்படிச் சொல்கின்றார்.

ஆண்டவர் இயேசுவும், எலிசாவும் தங்களுக்கு முன்பாக இருந்த 'மக்களுக்கு உணவு கொடுக்கவேண்டும்' என்னும் பொறுப்பினை நேர்மறையோடு அணுகி, அற்புதங்கள் நிகழக் காரணமாக இருக்கின் றார்கள். நமக்கு முன்பாக இருக்கும் பொறுப்பினை, சவாலினை பிலிப்பை போன்றோ, எலிசாவிடம் அப்பங்களைக் கொண்டு வந்த மனிதரைப் போன்றோ தட்டிக் கழிக்கவும் செய்யலாம். அப்படி இல்லையென்றால், நமக்கு முன்பாக இருக்கும் பொறுப்பினை நேர்மறையோடு எடுத்துக்கொண்டு, அற்புதங்கள் நிகழவும் காரணமாக இருக்கலாம்.

எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் பவுலடியார் கூறுவார், "நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள்". ஆம், நாம் ஒவ்வொருவரும் நமக்கு அடுத்திருப்பவரை, குறிப்பாகத் தேவையில் இருப்பவரை அன்போடு தாங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு சகோதரன் சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும் போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, "நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்து கொள்ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்;" என்பாரென்றால் அதனால் பயன் என்ன? (யாக். 2:15)

இன்றைக்கும் ஒருவேளை உணவுகூடக் கிடைக்காமல் பட்டினி கிடக்கும் மக்கள் உலகில் ஏராளம் உண்டு. இன்றைக்கு நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் ஒருவருக்கு மற்றவர் மீது உண்மையான அன்பில்லை, இது எல்லா நாட்டினருக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. ஒருசில இடங்களில் இயேசுவைப் போன்று எளியவர் பால் அக்கறை கொண்டு உதவக்கூடிய நல்ல உள்ளங்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். மேலும் நம்மிடம் இருப்பது குறைவாக இருந்தாலும், அதை கொடுத்தால், அது நிறைவாக மாறும் என்ற உண்மையானது நமக்கு உணர்த்தப்படுகின்றது எனவே, நமக்கு முன்பாக இருக்கின்ற பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காமல், இயேசுவைப் போன்று எல்லாருக்கும் இரங்குவோம். மற்றவரை அன்போடு தாங்கிக் கொள்வோம். அதன்வழியாக இறையருளை நிறைவாய் பெறுவோம். அப்போது நம் வழியாக இறைவன் எல்லாரையும் ஆசிர்வதிப்பார்.

த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா

**பொதுக்காலம் 17ஆம் வாரம்**

*1 அர. 4: 42-44*
*திபா 145: 10-11. 15-16. 17-18*
*எபே 4: 1-6*
*யோவான் 6: 1-15*

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வார நாள் முதல் வாசகம் : ஆண்டு 1**
**திருப்புகழ்மாலை : வாரம் 1**